**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 2/2020**

**Prosecution Witness : 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மரு. ராஜசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. குருசாமி** | **Calling** | : | **நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவு** |
| **Village** | : | **மீனாட்சி மிசின் மருத்துவமனை** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **மதுரை** | **Age** | : | **59** |
| | | | **Dated** | : | **22.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A2, A5 absent, petition filed and allowed. Others present. Both side counsels present.**

கூடுதல் சாட்சி மரு. **ராஜசேகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது மதுரை, மீனாட்சி மிசின் மருத்துவமனையில் நரம்பியல் பிரிவில் மருத்துவராக பணி புரிகிறேன். இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற காலத்தில் மேற்படி மருத்துவமனையில் மருத்தவராக பணி புரிந்தேன். அப்பொழுது எங்கள் மருத்துவமனையில் நரம்பியல் பிரிவில் மருத்துவராக திரு. பகத்சிங் என்பவர் பணிபுரிந்தார். தற்போது அவர் மேற்படி மருத்துவமனையில் அவர் பணியில் இல்லை. அவர் எங்கு பணியில் இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவரது கையெழுத்துக்கள் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 11.11.2013 ம் தேதியில் இரவு 09.30 மணி அளவில் பால்பாண்டி, த/பெ. வெள்ளைச்சாமி என்பவர் தனக்கு தெரிந்த நபரால் தாக்கப்பட்டதாக கூறி சிகிச்சைக்கு வந்தவரை மேற்படி மருத்துவர் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை கொடுத்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்ததாக அவரது குறிப்பில் இருந்து தெரிய வருகிறது.

1) 5 x 4 cm அளவுள்ள தையல் இடப்பட்ட சிதைந்த காயம் பின் மண்டைப் பகுதியில் இருந்தது.

2) 5 cm அளவுள்ள இடது பக்கவாட்டு தலைப்பகுதியில் ஒரு சிதைந்த காயம் இருந்தது.

3) இடது முன் மூளைப் பகுதியில் இரத்தக் கட்டு காயம் இருந்தது.

4) இடது பக்கவாட்டு மூளைப் பகுதியில் சிதைந்த காயம் இருந்தது.

5) இடது மூளைப் பகுதியில் இரத்தக் கட்டு காயம் இருந்தது.

6) இடது மூளையின் முன் பகுதியிலும் இரத்த கசிவு இருந்தது.

7) வலது பின் மண்டையில் கபாலத்தில் எலும்பு முறிவு இருந்தது.

8) பின் பக்க கபால பகுதியில் காற்று இறங்கி இருந்தது.

மேற்கண்ட காயங்களில் 1 மற்றும் 2 சாதாரண காயம் என்றும், இதர காயங்கள் கொடுங்காயங்கள் என்று மேற்கண்ட மருத்துவர் சான்று வழங்கி இருக்கிறார். அந்த காயச்சான்றிதழ் Ex. P4. இந்த வழக்கில் மேற்கண்ட காயம் பட்ட நபருக்கு CT Scan எடுக்கப்பட்டது. அதன் புகைப்பட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது Ex. P5. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

முதல் காயத்தை தவிர மற்ற காயங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். நோயாளியை சிகிச்சைக்காக

அனுமதிக்கப்பட்ட நேரம் காயச் சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அனுமதிக்கப்பட்ட நாள் 12.11.2013 என்று மேற்படி ஆவணத்தில் இருக்கிறது. வேறு ஏதாவது ஆவணங்களில் மேற்படி நபரை அனுமதிக்கப்பட்ட நேரம் உள்ளதா என்றால், Case Sheet ல் அதிகாலை 02.55 மணி என இருக்கிறது. பொதுவாக ஒரு நபரை மருத்துவமனையில் அனுமதித்த பின்பு தான் சிகிச்சை துவங்கப்படும் என்றால், அவசர கேசுகளில் அந்த விதி பின்பற்றப்படுவது இல்லை. அவசர சிகிச்சை ஆரம்பிக்கும் நேரத்தை, நோயாளியை அனுமதித்த நேரமாக எடுத்துக் கொள்ள முடியுமா என்றால், எனக்கு தெரியாது. காயச்சான்றிதழில் அதிகாலை 12.22, தேதி 12.11.2013 அன்று மேற்படி காயம்பட்ட நபரை பரிசோதித்தபோது, நான் முதல் விசாரணையில் சொன்ன 8 காயங்களும் இருந்ததா என்றால், ஆவணங்களில் அப்படித்தான் உள்ளது. Case Sheet ல் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட நேரம் அதிகாலை 02.55 என்று உள்ளது. Case Sheet ஐ பொறுத்த வரையில் அது எங்களுக்கு வேண்டும் என்பதால், அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க இயலாது (அதன் புகைப்பட நகலை நீதிமன்றத்தில் எடுத்து இந்த வழக்கின் தீர்வுக்காக இருதரப்பார் முன்னிலையில் குறியீடு செய்யப்படுகிறது). அந்த புகைப்பட நகல் Ex. D1. காயச்சான்றிதழில் சம்பவம் நடைபெற்ற இடம் பற்றி குறிப்பிடவில்லை. காயச்சான்றிதழில் ஒரு நபர் தாக்கியதாகத்தான் உள்ளது. எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டார் என்று குறிப்பிடப் படவில்லை. காயச்சான்றிதழில் அங்க மச்ச அடையாளங்களைப் பொறுத்த வரையில் மச்சம் பற்றி தான் குறிப்பிடப்பட்டு உள்ளது. நோயாளியை அனுமதிக்கப்பட்ட போது உடன் வந்த நபர் விஷ்ணு என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. Ex. P5 ல் நோயாளியின் பெயர் குறிப்பிடவில்லை. மேற்படி ஆவணம் மருத்துவர் திரு. ஆனந்த் என்பவரால் எடுக்கப்பட்டது என்றால்

சரிதான். நான் அவருக்காக சாட்சியம் அளிக்க வரவில்லை. Ex. P5 ஆவணத்தில் அது எடுக்கப்பட்ட நேரம் குறிப்பிடப்படவில்லை. Ex. P4 ஆவணம் இந்த வழக்கிற்கு உண்மைக்கு புறம்பாக தயாரிக்கப்பட்டு, இந்த வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.04.22 16:01:08 +0530